www.tamilarangam.net

692

அஞ்சாமை ஆகியவற்றை அறிந்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு அதன் இலங்கை கிளை இப்போது பெரும் முன்னேற்றங்களை செய்ய தயாராகியுள்ளது என் பதில் நம்பிக்கை கொண்டுள்ளது இந்தியத் துணைக் கண்டம் பூராவும் ட்ரொட்ஸ்கிசத்துக்கு நிச வாய்பான எதிர் காலம் உண்டு.


## "தொழிலாளர் பாதை" சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
'தொழிலாளர் பாதை' சந்தா விபரம்:

| | |
|---|---|
| 1 மாதம் — ரூ. 3–30 | 3 மாதம் — ரூ. 10–20 |
| 6 மாதம் — ரூ. 20–40 | 1 வருடம் — ரூ. 40–80 |

பெயர்: ______________________

முகவரி: ______________________

______________________

சந்தாக் காலம்: ____________ ரூ. ______ சதம் ______

சந்தாப் பணத்திற்காகிய
அஞ்சல் அல்லது காசுக்கட்டளையுடன்
நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பிவைக்கவேண்டிய

முகவரி:

திரு வாளர், "தொழிலாளர் பாதை"
90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை, கொழும்பு 10;




Raya

RAYA
87 RUE DE COLOMBES
92[illegible] AS[illegible] [illegible]UR -
- SEINE . FRANCE

# 1983 யூலை: தமிழர்கள் எப்படி காட்டிக் கொடுக்கப்பட்டார்கள்

கீர்த்தி பாலசூரிய

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக வெளியீடு

This pamphlet can be ordered from

**Neue Arbeiterpresse**
Alfredstr. 71
D – 4300 Essen 1
West Germany

Please pay DM 1,50 + DM 0,50 postage
to account no. 211 85 – 431, Postgiroamt Essen

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## Subscribe to
## Thozhilalar Pathai

Have it posted
20 issues: DM 26,-

Write to:
Neue Arbeiterpresse (B. Kamel)
Alfredstr. 71
D – 4300 Essen 1
West Germany

Subscription payable to
account no. 211 85 – 431, Postgiroamt Essen
(effected at any post office)

**Fund**

**In order to reprint and circulate *Thozhilalar Pathail* regularly in Germany we need your financial support. Please send donations to Postgirokonto „Neue Arbeiterpresse", B. Kamel, Nr. 211 85 – 431 Postgiroamt Essen. (Note „Tamil Paper".)**

**All incoming money in excess of the printing costs will be used to support the RCL in Sri Lanka.**

# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கும் பணிகளும்

**நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை 10-10-1986**

**1,-DM**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Printed in Germany
Neue Arbeiterpresse, Alfredstr. 71, D – 4300 Essen 1, West-Germany

# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் முன்நோக்கும் பணிகளும்

## நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அறிக்கை 10-10-1986

1. தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளின் தோல்வியுடன் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் வரலாற்றில் ஒரு புதிய சகாப்தம் ஆரம்பமாகியுள்ளது. ஒரு தசாப்தத்துக்கும் மேலாக ஹீலி – பண்டா – சுலோட்டர் கும்பலின் தேசிய வெறி, திரிபுவாத குண்டர் நிர்வாகத்தின் கீழ் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் தமது உலகக் கட்சியின் உள்ளேயே அரை சட்ட விரோத நிலைமைக்குள் புரட்சிகர வ்தி முறை காக்கும் ஒடுக்கப்பட்ட சிறுபான்மைக் குழுவாக இருக்க நேர்ந்தது. நிரந்தரப் புரட்சிக் கோட்பாடு, வெறும் கற்பனைக் கோட்பாடாகக் கருதப்பட்டதோடு, தொழிலாள வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்துக்காகப் போராடிய சகலரும் அமைப்பு ரீதியிலான தாக்குதலின் ஆதிக்கத்துக்குள்ளாகினர். ஹீலியின் வலக் கையான எம். பண்டா தமது மாஓவாத சித்தாந்தத்தினையும், முதலாளித்துவ தேசியவாத வேலைத் திட்டத்தையும் மூடிமறைக்கும் பொருட்டு வாயளவில் ட்ரொட்ஸ்கிசத்தை கடைப்பிடித்தார். பண்டா, பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்தின் சோசலிசப் போராளி அன்றி. அரைக் காலனித்துவ முதலாளித்துவ வர்க்கத்தினையும், அதன் அரச எல்லைகளினையும் காப்பாளர் என்பது அரசி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யல் வரலாற்றை ஆராயும் போது நிரூபிக்கப்பட்டுள்ளது. தமது நடவடிக்கைகளுக்கு உசிதமான முறையில் பங்களாதேஷில் இந்திய ஆக்கிரமிப்புக்கு அவரால் ஆதரவளிக்க முடிந்ததோடு, இந்தோனேஷிய ஐக்கியத்தின் பேரில் சுகார்ட்டோவின் பிணம் தின்னிகள் கிழக்கு ரீமோரில் நடாத்திய கோரமான மக்கள் படுகொலைகளைப் பேணுவதிலும் அவர் முன் நின்றார்.

**2.** பண்டாவின் முதலாளித்துவ தேசியவாதக் கருத்துக்கள் மத்திய கிழக்கு முதலாளித்துவ அரசாங்கங்கள் தொடர்பான ஹீலியின் வயிறு வளர்ப்பு சந்தர்ப்பங்களுடன் பெரிதும் ஒத்துப் போயிற்று. ஹீலி ஈராக் கம்யூனிஸ்ட் கட்சி அங்கத்தினர்களின் படுகொலைகளை அங்கீகரிக்கையில், பண்டா, கிழக்கு ரீமோர் விவசாயிகளை முழுமனே ஒழித்துக்கட்ட பேரார்வத்துடன் ஆதரவளித்தார். 1961 - 64 காலப்பகுதியில் சோசலிச தொழிலாளர் கட்சிக்கும் பப்லோவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட கொள்கையற்ற மறு ஐக்கியத்தையும், 1964 ஜூனில் திருமதி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்தில் இலங்கை சமசமாஜக் கட்சி நுழைவதையும் எதிர்த்து நடாத்திய போராட்டங்களில் கட்டிக்காத்த அடிப்படைக் கொள்கையை இவர்கள் இருவரும் முழுமனே நிராகரித்தனர். இதன் காரணமாகவே ஹீலியும் பண்டாவும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினுடன் விரோதம் கொண்டதோடு, சுலோட்டரின் உதவியுடன் அதனை உடல் ரீதியில் அழித்தொழிக்கவும் தொழிற்பட்டனர். புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், அவர்களின் காட்டிக் கொடுப்பின் கடந்த கால வரலாற்றை இடைவிடாது அவர்களுக்கு ஞாபகப்படுத்துவதாக மட்டுமின்றி, உலகம் பூராவுமுள்ள முதலாளித்துவ தேசிய வாதிகளுடன் அவர்கள் ஏற்படுத்திக் கொள்ள முயன்ற கொள்கையற்ற கூட்டுக்களுக்கு உடல் ரீதியான தடையாகவும் விளங்கிற்று.

**3.** புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துக்கு எதிராக தொழிலாளர் புரட்சிக் கட்சி நடாத்திய தாக்குதல்கள் பற்றிய நீண்ட ஆச்சரியமான அறிக்கைகளை ஆயும் சந்தர்ப்பம் இன்று அனைத்துலகக் குழுவுக்குக் கிடைத்துள்ளது.

இத் தாக்குதல்களில் கழகத்தின் தலைமைக்கு எதிரான சேறடிப்பு, சிங்கள இனவாதிகளுடன் சேர்ந்து குழிபறித்தல்



பு. க. க. காரியாளர்கள் ஜயவர்தனவின் குண்டர்களால் படுகொலை செய்யப்படுகையில் மௌனம் சாதித்து ஆதரவு வழங்கல் ஆதியன அடங்கும் இந்த கேடுகெட்ட நடவடிக்கைகளுக்காக தமது அரசியல் ஆளுமையை துஷ்பிரயோகம் செய்கையில் இதனை எதிர் கொண்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் உரிய முறையில் கிளர்ந்து எழ முடிந்தமைக்கு காரணம் ட்ரொட்ஸ்கிச அனைத்துலக வாத பாரம்பரியங்களில் ஆழமாக வேரூன்றி, உலகப் புரட்சியின் இலக்கில் ஈடாட்டமின்றி ஈடுபட்டிருந்த கட்சியாக அது இருந்தமையேயாகும்.

**4.** நீண்ட காலத்தின் பின்னர் இன்று, இந்திய துணைக் கண்டத்தின் பாட்டாளி வர்க்க, ஒடுக்கப்படும் விவசாயிகளின் பாரிய பொறுப்புக்கள் பற்றி ட்ரொட்ஸ்கிசத்தின் விரகி மூலோபாயங்களை கலந்துரையாட நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளது. முதலாவதாக, எமது நடவடிக்கைகளுக்கு வழி காட்டும் தீர்க்கமான அடிப்படைக் கொள்கைகள் பலவற்றை நாம் நிலை நிறுத்தியுள்ளோம். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் கிளைகள் பாட்டாளி வர்க்கத்தின் கட்சிகளாகும். பின் தங்கிய நாடுகளில் விவசாயிகளின் பாத்திரத்தின் பெரும் முக்கியத்துவத்தை விளங்கிக் கொள்ளும் அதே சமயம், எமது கிளைகள் ஒருபோதும் விவசாயிகள் இயக்கத்துடன் இணையாதிருப்பதோடு, தமது சிறப்பான தொழிலாள வர்க்க அடையாளத்தை எதுவிதத்திலும் இழந்துபோகக் கூடாது. தேசிய ஜனநாயகப் புரட்சியினை தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்தினால் மட்டுமே பூரணத்துவம் செய்து வைக்க முடியும் என்று ஊர்ஜிதம் செய்யப்பட்ட உண்மையில் இருந்து நாம் ஆரம்பிக்கின்றோம். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவுக்கு தற்காலிகமான மேலெழுந்தவாரியான வெற்றிகளையிட்டு அக்கறை இல்லை. அதன் காரியாளர்கள் நானாவிதமான முதலாளித்துவ தேசியவாதிகளுக்கு சேவகம் செய்பவர்களன்றி, சோசலிசப் புரட்சியை வழிநடாத்த முன்நிற்போராவார். 1927ல் ஏற்பட்ட தோல்வியின் ஆழமான அரசியல் படிப்பினைகளை விளங்கிக் கொள்ள மறுத்ததால் சீனத் தொழிலாள வர்க்கத்தினுள் வேரூன்றிய, மார்க்சிசக் கட்சியைக் கட்டி எழுப்பும் போராட்டத்தைக் கைநழுவ விட்ட மாஓ வாதத்தின் குணச் சிறப்புக்களை வாயடிக்கும் இயக்கத்தில் சேர்வதை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். இந்தோனேசியா தொடக்கம் கம்போடியா வரையும், இறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வில் சீனாவின் உள்ளேயும், பெற்ற படிப்பினைகளின் அடிப்படையில் கடந்த 37 ஆண்டுகளுள் மாஓ வாதத்தின் இந் தொல்லையை தீர்வு செய்வதற்கு வேண்டிய அவகாசம் உலகத் தொழிலாளர் வர்க்கத்துக்குக் கிடைத்துள்ளது.

**5.** நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் மட்டுமே ஆசிய மக்களை வெற்றிக்கு இட்டுச் செல்லும் [illegible] வளர்த்தெடுக்க முடியும். இந்த விளக்கத்தின் அடிப்படையிலேயே தமது இலங்கை கிளையின் வேலைத் திட்டத்தை பற்றி அது அவதானத்துடன் கலந்துரையாடுகின்றது. புறநிலை நிலைமையின் அபிவிருத்திகளுக்கு ஏற்ப நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தேசிய இனப்பிரச்சினையை ஆய்வு செய்ததோடு, அது கீழ்க் கண்ட முடிவுக்கும் வந்தது:

அ). நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளை, தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை தொடர்பான லெனினின் நிலைப்பாட்டையும், ட்ரொட்ஸ்கியின் நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டையும் அடிப்படையாகக் கொண்டுள்ளது. தனியான ஓர் அரசினை அமைக்கும் தமிழ் மக்களின் கோரிக்கைக்குப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சளைக்காது ஆதரவளிக்கிறது. சோல்பரி அரசியல் அமைப்புச் சட்டத்தின் கோழை அதிகார வெறியர்களான இலங்கை முதலாளி வர்க்கத்துக்கு தேசிய இனங்கள் இரண்டினையும் ஐக்கியப் படுத்தும் ஜனநாயக வேலைத் திட்டத்தை அமுல் செய்ய இயலாமையை வரலாற்று அனுபவங்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துள்ளன. 1947ல் இருந்து அவர்கள் தமிழ் மக்களின் உரிமைகளை நிராகரித்தமை, மக்கள் படுகொலை யுத்தமாக இன்று வளர்ச்சி கண்டுள்ளது. இந் நிலைமைகளின் கீழ் பிரிந்து செல்வது தமிழீழ மக்களின் தேவைகளுக்கு பொருத்தமானது. அவ்வாறே சிங்கள, தமிழ் தொழிலாள வர்க்கத்தினையும், ஏழை விவசாயிகளையும் ஐக்கியப்படுத்தவும் நல்ல நிலைமைகளை சிருஷ்டிக்கின்றது.

ஆ). தமிழ் மக்கள் தமது அரசினை நிறுவும் உரிமைப் போராட்டத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் என்றும் பாட்டாளி வர்க்க அனைத்துலக வாதத்தில் இருந்தே ஆரம்பிக்கின்றது. ஆதலால் தமிழ் முதலாளி வர்க்கம் சலுகைகளுக்காக செய்யும் பிரயத்தனங்களுக்கு எதுவிதமான ஆதரவும் வழங்காது சலுகையும் வழங்காது. தேசிய விடுதலைப் போராட்



டத்தின் உள்ளே புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எப்போதும் தொழிலாள வர்க்கத்தின் நலன்களின் பேரில் தோன்றி வருவதோடு, தமிழ் முதலாளி வர்க்கத்தில் இருந்தும், குட்டி முதலாளித்துவ வர்க்கங்களில் இருந்தும் அதன் சுயாதீனத்தை உறுதி செய்யப் போராடுகின்றது. தமது அரசினை அமைக்க தமிழ் மக்களுக்குள்ள உரிமையைக் காக்க நிபந்தனையின்றி முன் நின்றுவரும் அதே சமயம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத் திட்டம் ஏழை விவசாயிகளுடனும், தெற்கில் உள்ள வெகுஜனங்களுடனும் நெருங்கி இணைந்து கிளர்ந்துள்ள தமிழ் தொழிலாள வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஜனநாயகப் புரட்சி வெற்றி காணும் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. சுயநிர்ணயத்துக்கான தேசியப் போராட்டத்தை ஏகாதிபத்தியத்திற்கும், தமிழ், சிங்கள முதலாளி வர்க்கங்களிடையேயுள்ள அதன் ஏஜன்டுகளுக்கும் எதிராக சோசலிசப் புரட்சியுடன் இணைப்பதன் மூலம் மட்டுமே தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தை வென்றெடுக்க முடியும் என வலியுறுத்துகின்றது. தேசிய விடுதலைச் சக்திகளினால் நடாத்தப்பட்டு வரும் ஆயுதப் போராட்டத்தின் முற்போக்குத் தன்மையைப் புரிந்து கொண்டுள்ள புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தொழிலாளர் – விவசாயிகளின் சோவியத் சபைகளை அமைக்கவும், ஏகாதிபத்திய முதலாளித்துவ சொத்து முறையினை நிர்மூலமாக்கவும் போராடுவதன் மூலம் அப்/போராட்டத்தைப் போஷித்து வளர்த்து ஆழமாக்க முயல்கின்றது.

இ). சகல நிலைமைகளிலும் தமிழ் சிங்கள தொழிலாள வர்க்கத்தின் முன்னணி படை அணியாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தமது நிபந்தனையற்ற சுயாதீனத்தை காக்க போராடுவதன் மூலமே இம் முன்னோக்கை முன்னெடுத்துச் செல்லமுடியும். சிங்கள ஒடுக்கு முறைக்கு எதிராக முதலாளித்துவ தேசிய இயக்கத்துடன் உபாய ரீதியிலான கூட்டின் அவசியத்தை அங்கீகரிக்கும் அதே சமயம் இச் சகல உடன்பாடுகளும் கண்டிப்பாக ‘தனியாக பயணம் செய்! இணைந்து தாக்கு!’ என்ற லெனினிச கொள்கைகளை அடிப்படையாகக் கொள்ளவேண்டும்.

ஈ). தேசிய விடுதலைப் போராட்டத்தின் முற்போக்குத் தன்மை என்னவாக இருப்பினும் சிங்கள - தமிழ் தொழிலாளர்களுக்கென ஒரு புரட்சிக் கட்சியே இருக்க முடியும். அக் கட்சி, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே உள்நாட்டு யுத்த நிலைமைகளின் கீழ் அமைப்பு ரீதியான இனங்காணலின் அவசியத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்.

www.tamilarangam.net

-ளை அங்கீகரிக்கும் அதே சமயம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தீவின் சகல தொழிலாளர் பிரிவினரையும், அதாவது சிங்களத் தொழிலாளர்கள் தோட்டத் தொழிலாளர்களை ஒரே பாதகையின் கீழ் அணிதிரட்டப் போராடுகின்றது. தீவில் இன்றுள்ள திட்ட வட்டமான நிலைமைகளின் கீழ் வடக்கில் பாதுகாப்பு வாதமும் தெற்கில் தோற்கடிப்பு வாதமும் ஒன்றிணைந்த புரட்சிகர வேலைத் திட்டத்தின் கூறுகளாகும்.

தேசிய இயக்கத்தின் முதலாளித்துவ தன்மையைப் புரிந்து கொள்ளும் அதே சமயம் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதன் சீர்திருத்தவாத, புரட்சிகர பிரிவுகளுக்கிடையே அவசியமான வேறுபாட்டை (எம். பண்டா குறிப்பிட்ட 'வெறும்' வேறுபாடு அல்ல) நிலை நாட்டுகின்றது.

1. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், தமிழர் விடுதலைக் கூட்டணியை தமிழ் முதலாளி வர்க்கத்தின் முக்கிய பிரதிநிதியாகக் கொள்கிறது. ஆயுதப் போராட்டத்தின் எதிரிகளான இவர்கள் தேசிய சுதந்திரத்துக்காக கொள்கை சார்ந்த உறுதியான போராட்டத்தை நடாத்த இலாயக்கற்றவர்கள்; அதன் முழு வரலாறும், இந்திய – இலங்கை முதலாளித்துவ வர்க்கங்களுக்கு வேட்கமின்றி 'பந்தம்' பிடித்தல், கோழைத் தன்மான சமரசங்கள், முழுப்படியான காட்டிக்கொடுப்புக்களால் நிறைந்துள்ளது. சிங்கள ஒடுக்குமுறையாளரிடம் இருந்து சுதந்திரம் பெறுவதைக் காட்டிலும் இவர்கள் தமிழ் பரந்த மக்களைக் கண்டே அஞ்சுகின்றனர். தமிழ் விடுதலைக் கூட்டணியின் துரோக சுயரூபத்தை அம்பலப்படுத்துவதும், தேசிய விடுதலை இயக்கத்தை தேசிய முதலாளிகளின் நலன்களுக்கு அடிமைப்படுத்தும் அவர்களின் முயற்சியை அம்பலப் படுத்துவதும் புரட்சிக்கம்யூனிஸ்ட்கழகத்தின் பொறுப்பாகும்.

2. தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் போன்ற நானாவித தமிழ் விடுதலை அமைப்புக்களை புரட்சிகரத் தேசியவாதிகளாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இனம் காண்கின்றது. தமிழ் தாயகத்தை இராணுவ ரீதியில் விடுதலை செய்யும் பொருட்டு அவர்கள் நடாத்திவரும் திடசங்கற்பம் மிக்க போராட்டம் இடம் பெறும் அதே சமயம் அவர்களின் குட்டி முதலாளித் துவ சிந்தனையும், வேலைத் திட்டமின்மையும், வெற்றியை அடைவதற்கு அவசியமான தீவின் தொழிலாளர்களையும்,



விவசாயிகளையும் அணிதிரட்டா வண்ணம் அவர்களை தடு
ன்றது. மேலும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் அழி
மிக்க அழுத்தங்களை எதிர்த்துப் போராடவும், இந்திய மு
லாளி வர்க்கத்தின் துரோக குழி பறிப்புகளில் இருந்து தமி
விடுதலை இயக்கத்தின் சுயாதீனத்தை நிலைநாட்டுவதிலும் அவ
கள் வெற்றி பெறுவதாய் இல்லை. இக்குழுக்களின் குட்டி மு
லாளித்துவ தன்மையில் இருந்து ஊற்றெடுக்கும் அவர்களின்
வேலைத்திட்டம் சம்பந்தமான குழப்பங்கள் இவர்களை இந்திய
முதலாளி வர்க்கத்தினதும் மாஸ்கோவ், பீகிங் ஸ்டாலின்
வாதிகளினதும் பொறிகளில் அகப்பட்டவைக்கும் அரசியல்
நச்சு வளையத்துக்கு இட்டுச் செல்கிறது. சகல நிலைமைகளி
லும் தனது அரசியல் சுயாதீனத்தைப் பேணிக் கொள்ளும்
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், புரட்சிகர தேசியவாதிகளில்
இருந்து சுயாதீனமான முறையில் தொழிலாள வர்க்கத்தை
அணிதிரட்டுகின்றது. அவ்வாறே அவர்களின் கொள்கைகளை
விமர்சிக்கும் உரிமையையும் கொண்டிருக்கும்.

அ). தேசிய சுயநிர்ணயத்துக்காக வடக்கில் நடைபெறும் போராட்டத்தையும், தெற்கில் சிங்கள தொழிலாளர், ஒடுக்கப்படும் விவசாயிகளின் போராட்டத்தையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்ட ஒரே முழுமையாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் கணிக்கின்றது. இவ்விரண்டு போராட்டங்களுக்குமிடையே சீனப் பெருஞ்சுவர் கிடையாது; அவ்வாறே இவற்றின் வளர்ச்சியை முன்கூட்டியே நிர்ணயம் செய்யும் தொடர் வரிசைகளும் கிடையாது; வடக்கின் விடுதலைப் போராட்டத்தினால் உக்கிரம் கண்டு வரும் இலங்கை முதலாளித்துவத்தின் குணப்படுத்த முடியாத நெருக்கடி, சிங்கள வெகுஜனங்களதும், தமிழ் தோட்டத் தொழிலாளர்களதும் கிளர்ச்சியை உண்டுபண்ணும். அத்தகைய கிளர்ச்சி புரட்சிக்கான முன்னோடி நிலைமைகளை உருவாக்குவதன் மூலம் ஆட்சி பற்றிய பிரச்சினையை நிகழ்ச்சி நிரலில் சேர்க்க இடமுண்டு. அந்நிலையில் தீவு பூராவும் தொழிலாள வர்க்கப் போராட்டத்தின் இணைந்த தன்மையை முன்னணிக்குக் கொணர்ந்து, இலங்கைத் தொழிலாள வர்க்கமும், விவசாயிகளும் தமிழ் விடுதலைக்கான தீர்க்கமான தாக்குதலை நடாத்தும்; சம்பவங்களின் நிச பயணத்திசை என்னவாக இருப்பினும், சோசலிச உள்ளடக்கத்தை தேசிய இயக்கத்தினுள் கொண்டு செல்லப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நடாத்தும் போராட்டம், சிங்கள வெகுஜனங்களுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உந்துவேகத்தை வழங்கி, வடக்கிலும், தெற்கிலும் ஒடுக்கப்படும் மக்களிடையே புரட்சிகரப் பிணைப்பை ஊர்ஜிதம் செய்யும்.

**6.** தெற்கில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் எதிர் கொள்ளும் முக்கிய அரசியல் பணி, சமசமாஜ – ஸ்டாலினிச – இ. தொ. கா. தலைமைகளின் பிடியில் இருந்து தொழிலாள வர்க்கத்தை மீட்டெடுப்பதே என்பதை அனைத்துலகக் குழு ஏற்றுக் கொள்கின்றது. தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்டு வரும் மக்கள் படுகொலை யுத்தத்தில், இத் தலைமைகள் இராணுவ ஒடுக்கு முறைக்கு நேரடி ஆதரவு வழங்குவதன் மூலமோ, வட்டமேசை மகா நாடுகளில் கோழைத்தனமாக பங்கு கொள்வதன் மூலமோ அல்லது அத்தகைய வேறு வடிவிலான துரோக ஆதரவுகளுக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தை அணிதிரட்டுவது இதன் நடுமையமாக உள்ளது. யுத்தத்துக்கு எதிரான இப் பிரச்சாரத்துடன் கைகோர்த்த வண்ணம், யுத்தத்துக்கும், சர்வதேச நாணய நிதியத்தின் எஜமான்களின் தேவைகளின் பேரிலும் அரசாங்கமும் அதன் அடிவருடிகளும் கேட்டு நிற்கும் பொருளியல் தியாகங்களை அடியோடு நிராகரிக்கும்படி புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தை திடசங்கற்பத்துடன் வேண்டுகின்றது.

## சி, ல. சு, க, வுடன் கூட்டு

**7.** ஏகாதிபத்தியத்தின் கேவலமான முதலாளித்துவ ஏஜன்டுகளுக்கும். அவர்கள் சார்ந்துள்ள படு பிற்போக்கு முதலாளித்துவ அரசுக்கும் எதிராக தொழிலாள வர்க்கத்தை பரந்த அளவில் அணிதிரட்டுவதற்கான வேலைத் திட்ட அடிப்படையாகப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சோசலிச வேலைத்திட்டத்தினை முன்வைக்கின்றது. தேசியமுதலாளித்துவ ஏஜன்டுகளை ஒழித்துக் கட்டாமலும், உற்பத்திச் சாதனங்களில் தொழிலாளர் உரிமையையும், நிர்வாகத்தையும் உறுதி செய்யும் போராட்டம் இல்லாமலும் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக எந்தவொரு போராட்டமும் இடம் பெற முடியாது.

**8.** அரைக் காலனித்துவ நாடான இலங்கை எதிர் கொண்டுள்ள தீர்க்கப்படாத ஜனநாயகப் பணிகளைப் பற்றி ஆழமான விளக்கம் கொண்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்துக்கும், ஒடுக்கப்படும் விவசாயிகளுக்கும் இடையே பிணைப்பினை உண்டுபண்ணப் போராடுகின்றது. பல தசாப்தங்களாக விவசாயிகளின் மிகவும் அடிப்படையான தேவைகளைத் தன்னும் நிறைவேற்றத் தவறிய முதலாளித்துவக் கட்சிகள், நீச ஜனநாயக வேலைத் திட்டத்துக்குப் பதிலாக சிங்கள இனவெறிப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளன. புரட்சிகர வேலைத் திட்டத்தினை முன் வைக்க மறுத்ததன் மூலமும், சி. ல. சு. கட்சியுடன் கூட்டுச் சேர்ந்ததன் மூலமும் சமசமாஜக் கட்சி விவசாயிகளை முதலாளி வர்க்கத்திற்குப் பலியிட்டது.

**9.** கொடிய சுரண்டலோடு, இரக்கமற்ற ஒடுக்குமுறைக்கும் (குடியுரிமை மறுப்பு ஆதிய) பலியாகியுள்ள தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான ஒடுக்கு முறையின் ஊற்றுவாய் இலங்கை முதலாளித்துவ அரசின் தோற்றமும், வளர்ச்சியுமே. இந்த ஒடுக்கு முறை 1948ல் சோல்பரி அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட போலி சுதந்திரத்துக்கு எதிராக ட்ரொட்ஸ்கிஸ்டுகள் காட்டிய வரலாற்று புகழ்மிக்க சமசமாஜிஸ்டுகள் நீண்ட காலத்துக்கு முன்பே மறந்து போய்விட்ட – எதிர்ப்பினை நியாயப்படுத்தியுள்ளது. இதன் சமீபகால கூட்டப்புளிக் கோலங்கள் எந்தவொரு ஜனநாயகப் பணியையும் அமுல் செய்ய முடியாத இலங்கை முதலாளி வர்க்கத்தின் இயலாமையை நிரூபித்துள்ளது. பு. க. க சகல பாகுபாடுகளையும் அகற்றும்படியும், சகல தோட்டத் தொழிலாளர்களுக்கும் குடியுரிமை வழங்கும்படியும், பௌத்தத்துக்கும் சிங்கள மொழிக்கும் அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை நீக்கும்படியும் வேண்டுகின்றது. அரசியலமைப்புச் சட்டத்தை நீக்குவதற்கு நிச அரசியலமைப்புச் சபை அவசியமாகியுள்ளது. தோட்டத் தொழிலாளர்கள் அதில் பங்கு கொண்டு, வாக்களிக்கப் பூரண உரிமை வழங்கப்படவேண்டும்.

**10.** முதலாளி வர்க்கக் கட்சிகள் அனைத்திற்கும் எதிராக தொழிலாளர் – விவசாயிகள் அரசாங்கத்துக்கான கோரிக்கையை அடிப்படையாகக் கொண்டு செய்யும் போராட்டத்தின் மூலமே இவ் வேலைத் திட்டத்தை யதார்த்தமாக்க முடியும். இம் முன் நோக்கு, முதலாளித்துவ வர்க்கத்தின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்தவொரு பிரிவினருடனுமான அரசியல் கூட்டினை மக்கள் முன்னணியை மூர்க்கமாக எதிர்க்கின்றது இந்த இலக்கில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்; சமசமாஜ - கம்யூனிஸ்ட் கட்சிகள் அரசாங்கத்துடனும், முதலாளித்துவக் கட்சிகளுடனும் கொண்டுள்ள சகல உறவுகளையும் துண்டித்துக் கொள்ளக் கோருவதுடன், ஆட்சியதிகாரத்தை கைப்பற்றி மேலே குறிப்பிட்ட ஜனநாயக, சோசலிச வேலைத் திட்டத்தை அமுல் செய்யும்படி கோருகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தோட்டத் தொழிலாளர்களின் வலதுசாரித் தலைவரான தொண்டமானை யூ. என். பி. அரசாங்கத்திலிருந்து இராஜினாமாச் செய்யும்படி வேண்டுகின்றது. இந்த விதத்திலேயே இத் துரோகிகளின் முகமூடிகளை கிழித்தெறியவும் வெகுஜனங்களை புரட்சிக் கட்சியின் பக்கம் வென்றெடுக்கவும் முடியும் பு. க. க. வின் கொள்கை ட்ரொட்ஸ்கியின் போதனைகளில் இறுக்கமாக காலூன்றி நிற்கின்றது.

"தொழிலாளர்களையும், விவசாயிகளையும் அடிப்படையாகக் கொண்டதும் அவர்களின் சார்பில் பேசுகின்றதுமான சகல கட்சிகளையும் இயக்கங்களையும் முதலாளித்துவ வர்க்கத்திலிருந்து அரசியல் ரீதியில் பிரியுமாறும், தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்துக்கான போராட்டப் பாதையில் காலடி வைக்குமாறும் நாம் வேண்டுகின்றோம். இப் பாதையில், முதலாளித்துவ பிற்போக்குக்கு எதிராக நாம் அவர்களுக்கு பூரண ஆதரவு வழங்குவோம். அதே சமயம், நாம் அந்த இடைமருவு கோரிக்கைகளை சூழ பிரச்சாரத்தை விருத்தி செய்வோம். எமது கருத்தின்படி அவை 'தொழிலாளர் - விவசாயிகள்' அரசாங்கத்துக்கான வேலைத்திட்டமாகின்றன."

**11.** தொழிலாளர் - விவசாயிகள் அரசாங்கத்தினை அமைக்கும் பு. க. க வின் கோரிக்கை, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு எதிரிடையாக முன்வைக்கப்படவில்லை. ஆனால் தொழிலாளர்களும், விவசாயிகளும் தமது சொந்த சோவியத் அதிகாரத்தை நிறுவுவதற்கு அவர்களை அணிதிரட்டுவதற்கான ஒரு இடைமருவு கோரிக்கையாகவே முன் வைக்கப்படுகின்றது. வர்க்கப் போராட்டத்தின் வரலாற்றுத் தொடரில் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்துக்குத் தடையாக ஒரு விசேட ஜனநாயக கட்டத்தைத் திணிக்கச் செய்யப்படும் வகை ஜனநாயகத்தினையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிராகரிக்கின்றது: எதிர்த்துப் போரிடுகின்றது; மேற்சொன்ன வேலைத் திட்டத்துக்கான பிரச்சாரத்துடன் இணைந்த வண்ணம், புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் நிலைமைகள் பக்குவம் அடையும் நிலையில் புதிய அரச அதிகாரத்துக்கான அடிப்படையாக தொழிலாளர் - விவசாயிகள் சோவியத்துக்களை அமைக்கும்படி அழைப்பு விடுகின்றது. இது முதலாளித்துவ அரசினைச் சிதறடிப்பதில் இருந்து தோற்றம் எடுக்கும்.



**12.** சிங்கள - தமிழ் வெகுஜனங்களின் புரட்சிகரப் போராட்டங்கள், அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் தலைவிதி - முக்கியமாக கோடானு கோடி இந்திய பாட்டாளி வர்க்கத்தினுடன் பிரிக்க முடியாத விதத்தில் இணைந்துள்ளது. இந்தியத் தொழிலாள வர்க்கத்துடன் நெருக்கமான தோழமை உறவுகளை ஏற்படுத்துகையில், இந்தியத் துணைக் கண்டம் பூராவும் ஒரு கூட்டு அமைப்பினை இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது உருவாக்க சமசமாஜக் கட்சி நடாத்திய தைரியமிக்க முன்னோடி வேலையின் வரலாற்றினை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆய்வு செய்ய வேண்டும். இந்திய - இலங்கைத் தொழிலாள வர்க்கங்களின் பொது நலன்களை உறுதி செய்வதே, இந்த தொடர்புகளை புனருத்தாரணம் செய்வதற்கான முதல் நடவடிக்கையாக விளங்க வேண்டும்.

**13.** தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகளின் பிடியில் இருந்து விடுபட அனைத்துலகக் குழு நடாத்திய போராட்டத்திலும் ட்ரொட்ஸ்கிச வேலைத் திட்டத்தினால் உலக இயக்கத்தை மீண்டும் ஆயுதபாணியாக்குவதிலும் ஒரு தீர்க்கமான பாத்திரத்தை வகித்த புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இப்பொழுது தனது உள்ளார்ந்த அமைப்பினை உடல் ரீதியில் பலப்படுத்துவதில் தொடர்ந்து முன்னேற வேண்டும். பு. க. க. வை கோட்பாட்டு ரீதியில் மீள ஆயுதபாணியாக்கியமை அதன் பத்திரிகை விற்பனையை விரிவுபடுத்தவும், புதிய அங்கத்தவர்களைத் திரட்டவும், புதிய கிளைகளை அமைக்கவும் சாத்தியமான நல்ல நிலைமைகளை உருவாக்கியுள்ளது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தினர்களின் எல்லை கடந்த விசுவாசம் உலகப் புரட்சி இலட்சியத்துக்கான அவர்களின் அர்ப்பணம், முதலாளித்துவ அரச ஒடுக்கு முறையின் எதிரில் அவர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்